பாராளுமன்றத்தில் அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக நிலையியற் கட்டளை இல. 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல. 290
நிறுவனத்தின் பெயர் :- களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுகங்கள் வழங்கல் வசதிகள் இயந்திரப் படகுகள் மற்றும் கப்பல் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

	குழுவினால் அடையாளம்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01.	வருடாந்த பொருட் பட்டியல் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான, குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயற்படுத்தப்படாமை.	பொருட்பட்டியல் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் இராஜாங்க அமைச்சில் நிலவிய மனித வளப் பற்றாக்குறை காரணமாக உரிய காலத்தில் நடைமுறைப்படுத்த முடியாது போனதோடு, அவற்றில் பல விடயங்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்டன.
02.	அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லாமை அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினைகள் வரையப்பட்டிருக்காமை ஒரு வாகனம் பாவனைக்குதவாதது என தெரிவிக்கப்பட்டிருந்தும் 8 மாதங்களுக்கும் மேலாக அகற்றப்பட்டிருக்காமை 29.12.2016 ஆந் திகதிய 2016/30ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பத்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வினை சரிபார்க்கத் தவறியமை. உரிய காலத்திற்கு புறம்பாக வேறு நிறுவனங்களுக்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.	மனித வளப் பற்றாக்குறை காரணமாக எரிபொருள் நுகர்வு சோதனையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது எனினும், கணக்காய்வுப் பரிந்துரைகளின் பின்னர், அது தொடர்பான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், இராஜாங்க அமைச்சினை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டது.
03.	ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்துவரும் கடன்	நிலுவைத் தொகைகள் தீர்க்கப்பட்டு, மீதமுள்ள கடன் நிலுவைத் தொகை துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும்

	நிலுவைகளின் இருப்பு	விமான சேவைகள் அமைச்சுக்கு மாற்றப்பட்டது.
04.	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி, நிறுவனத்தில் தகவல்களை வழங்க எந்த ஒரு குறிப்பிட்ட அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. பொதுமக்கள் கோரும் தகவல்களை வழங்கியமை/ வழங்காமை பற்றிய விவரங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. கோரப்படும் தகவல்கள் வழங்கப்படாமை தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை ஆவணப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கும் ஆவணம் பேணப்படாமை.	மனித வளப் பற்றாக்குறை காரணமாக, குறிப்பிட்ட தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என்பதுடன், அப்பணிகள் பதிற்கடமைபுரியும் பணிப்பாளர் (திட்டமிடல்) மூலம் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக உரிய ஆவணங்கள் பேணப்பட்டதுடன், இராஜாங்க அமைச்சுடன் பொதுமக்களுடன் சம்பந்தப்பட்ட பணிகள் ஒதுக்கப்படாமையால் பொதுமக்கள் இராஜாங்க அமைச்சிடம் தகவல் கோரியதற்கான குறிப்புகள் இல்லை.
05.	நிறுவனத்தைப் பற்றிய தேவையான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டு பேணப்படவில்லை. நிறுவனத்தால் பேணப்படும் இணையத்தளத்தின் மூலம் பொதுமக்கள் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்ய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர், இணையதளமொன்றைத் தயாரிக்கும் பணியின் ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருவதுடன், இராஜாங்க அமைச்சின் செயற்பாடுகள் அமைச்சரவை அமைச்சுக்கு மாற்றப்பட்ட நிலையில், இணையத்தளமொன்று தேவையில்லை என்ற காரணத்தினால் அப்பணிகள் கைவிடப்பட்டன.
06.	பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை. பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்து மதிப்பிடுவதற்கான	மனிதவள பற்றாக்குறை காரணமாக பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கும் பணிகள் தாமதமடைந்தன.

	முறைமையொன்று நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டிருக்காமை.	
07.	2018 ஜனவரி 24 ஆந் திகதியிட்ட 02/2018ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி முறையாக தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தைத் தயாரிக்கத் தவறியமை. தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்தின் மூலம் 50 சதவீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி வாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்காமை. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தமை	மனிதவள பற்றாக்குறை மற்றும் கொரோனா தொற்றுநோய் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டன.

K.D.S. Ruwanchandra
Secretary
Ministry of Ports, Shipping & Aviation
No. 19, Chaithya Road, Colombo 01, Sri Lanka.